**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | |
|---|---|---|---|
| **Case No.** | : **STC .374/2018** | | |
| **PW/DW/CW** | : **PW2** | | |
| **Name** | : பேச்சியம்மாள் | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

( Accused present)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.11.2024

---

**முதல் விசாரணை:**

நான் கீழ மாதரையில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது மகன் ஆவார். நான் கட்டிட வேலைக்கு செல்வது வழக்கம். கடந்த 9 வருடங்களுக்கு முன்பு சம்பவ தினத்தன்று மாலை நான் பூதிப்புரத்தில் கட்டிட வேலை முடித்து பூதிப்புரம் பேருந்து நிறுத்தத்தில் செல்வதற்காக சாலையின் வடக்குபக்கம் நின்று கொண்டிருந்தேன். பேருந்து நிறுத்தம் தெற்கு பக்கம் உள்ளது. தேனி – மதுரை ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்காக வந்த வனத்துறை வாகனம் வேகமாக வந்து நின்று கொண்டிருந்த என் மீது மோதியதில் தூக்கி எறியப்பட்டேன். வனத்துறை வாகனம் நிற்காமல் சென்றது பக்கத்தில் இருந்த டீக்கடைகாரர் அய்யர் அவருடைய இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்று விபத்து ஏற்படுத்திய வாகனத்தை மடக்கி பிடித்தார்.

2. எனக்கு வலது கையிலும், இடது காலிலும் எலும்பு முறிவு ஏற்பட்டது. உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு என்னுடன் வேலை செய்த கொத்தனார் விபத்து ஏற்படுத்திய வாகனத்தில் சிகிச்சைக்காக அழைத்து சென்றார். அங்கிருந்து மேல் சிகிச்கைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு சுமார் 45 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். ஆஜர் எதிரி தான் அன்றைய தினம் வாகனத்தை ஓட்டி வந்ததாக தெரிந்துகொண்டேன். எனது மகன் அ.சா.1 அன்றைய தினமே மதுரை அரசு மருத்துவமனைக்கு வந்து என்னை பார்த்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

சம்பவம் தார் ரோட்டில் நடைபெற்றது என்றால் சரியல்ல சாலையின் வடக்கு பக்கம் மண் தரையில் நின்றிருந்தபோது நடந்தது. நான் வனத்துறை வாகனம் மேற்கிலிருந்து வருவதை கவனிக்காமல் திடீரென சாலையை கடந்ததால் தான் விபத்து நடந்தது என்று சொன்னால் சரியல்ல. நான் ரோட்டின் வடக்கு பக்கம் நின்றபோது சம்பவம் நடந்ததாகவும், நிற்காமல் சென்ற விபத்து ஏற்படுத்திய வாகனத்தை அய்யர் என்பவர் விரட்டி சென்று மடக்கி பிடித்ததாகவும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. S.d./ Petchiyammal

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.